**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 618/2004**

Deposition of **<u>P.W.-1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench clerk of this court, on 04.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : செல்வக்குமார் Fathers Name : லேட்.கிருஷ்ணன்

துவக்க நேரம் : 04.33P.M.

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**:

1. தாவாவில் நான் 2-ஆம் வாதி என்றால் சரிதான். தாவா சொத்தின் ச.எண். என்ன என்றால் பெரியேரி கிராமத்தில்184/5A ஆகும். அதன் விஸ்தீரணம் என்ன என்றால் ஏக்.1.51 செண்ட் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் ச.எண். 184/5A-ன் விஸ்தீரணம் புஞ்.ஹெக்.0.61.5 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் நில அளவையர் உதவியுடன் அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிக்கையின் பேரில் ஏதேனும் ஆட்சேபனை செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு பின்னிட்டு மேற்படி வழக்கில் எந்தெந்த நபர்களை புதிய தரப்பினர்களாக சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால், ஆனந்தன், செல்வி, அமுதலட்சுமி ஆகியோர்களை சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்தேன். மேற்படி நபர்களை எதற்காக இவ்வழக்கில் சேர்த்தேன் என்றால் எனக்கு

பாத்தியப்பட்ட தாவா சொத்தை மேற்படி நபர்கள் ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளதால் அவர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளேன்.

3. ஆணையர் தனது அறிக்கையிலும், நில அளவையர் வரைபடத்திலும், தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அதன்பேரில்தான் ஆக்கிரமிப்பாளர்களை தரப்பினர்களாக சேர்க்க இம்மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவின் பேரில் நீதிமன்ற உத்தரவின் படி ஆக்கிரமிப்பாளர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு எதிரான வழக்கை நான் வாபஸ் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். அதன்பின்னிட்டு தாவா சொத்து விவரத்தில் திருத்தம் எதுவும் மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை.

4. மேற்படி ஆக்கிரமிப்பாளர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டி திருத்தம் செய்த பொழுது தாவா பரிகாரத்தின் ஆக்கிரமிப்பு பகுதிகளை 4, 5, 6 பிரதிவாதிகளிடமிருந்து மீட்டு தரவேண்டும் என பரிகாரம் கேட்டும், திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான், ஆனால் 4, 5, 6 பிரதிவாதிகள் எங்களுடன் சமாதானமாகிவிட்டதால் அவர்களுக்கு எதிரான வழக்கை நான் திரும்ப பெற்றுக் கொண்டேன். அவ்வாறு வழக்கை திரும்ப பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணையில் 4, 5, 6 பிரதிவாதிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

5. நான் தாவாவை திருத்தம் செய்ய கோரி தாக்கல் செய்த மனுவில் 4, 5, 6 பிரதிவாதிகள் எவ்வளவு இடத்தை ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி 3 நபர்களுக்கு எதிரான இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று குறிப்பாணை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாவா 2, 3 அயிட்ட சொத்துக்கள் குறித்து மட்டும் விளம்புகை பரிகாரம் கோரி திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் முதலில் வழக்கை தாக்கல் செய்த பொழுது தாவா சொத்தாக ஒரே ஒரு சர்வே எண்ணில் உள்ள நிலத்தை

மட்டும்தான் குறிப்பிட்டு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ஆனால் தற்பொழுது திருத்தப்பட்ட தாவாவில் 3 அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்:05.01P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt.L.Kalaiselvi - O.S. No.618/2004, Dt.04.03.2026.